II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No.125 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.03.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | M.Venkatesan | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 கடனுறுதி சீட்டு எந்த பேனாவால் எழுதப்பட்டது என்றால் எனது பார்ட்னர் தான் அதனை எழுதினார். எங்களது தரப்பில் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை. எனது முந்தைய விசாரணையில் பிரதிவாதி தான் கடனுறுதி சீட்டை எழுதியதாக சொல்லிவிட்டு தற்போது குணசீலன் தான் எழுதியதாக சொல்கிறேன் என்றும் இதில் இருந்தே நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளது உறுதியாகிறது என்றாலும் சரியல்ல. ரூ. 3 லட்சம் கடன் பெற்ற போது வா.சா.ஆ.1 யை எழுதி பெற்ற நிலையில் 7 லட்சம் கடன்கொடுத்த போது ஏன் மீண்டும் எழுத வில்லை என்றால் அடமான பத்திரத்தை ஒரு முறை தான் எழுதமுடியும் என்பதால் மீண்டும் எழுதவில்லை. வா.சா.ஆ.3 ல் உள்ள சங்கதிகள் ஒரு இங்க்காலும், கயொப்பம் மற்றும் சாட்சி கையொப்பம் இன்னோரு இங்க்காலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பாட்னர் எழுதிய பிறகு போன் பேசிகொண்டிருந்ததால் எனது பேனாவை கொடுத்தேன். வா.சா.ஆ.2 கடன் பத்திரத்தில் சாட்சிகள் கருப்பு இங்கால் கையொப்பமிட்டுள்ளனர் என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் ரூ.

3 லட்சம் தான் கடன் வாங்கினார் என்றும் அதற்கான பாதுகாப்பிற்காக தான் வா.சா.ஆ.3 யை எழுதி வாங்கியுள்ளேன் என்றும் கோரோன கால கட்டத்தில் அவரால் வட்டி செலுத்த முடியாததால் நானாகவே வா.சா.ஆ.3 யை பூர்த்தி செய்து கொண்டேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் பெற்ற ரூ.3 லட்சம் கடனில் பாதியை பிரதிவாதி செலுத்திவிட்டார் என்றும் ரூ.1,50,000/- மீதம் உள்ளது என்றாலும் சரியல்ல. எனவே எனது வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.